தினமணி

குறைந்து வரும் பூண்டி ஏரி நீர்மட்டம்

First Published : 21 Feb 2011 02:34:17 AM IST



திருவள்ளூர், பிப் 20: கிருஷ்ணா கால்வாயில் நீர்வரத்து நின்றதால் பூண்டி ஏரியில் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது.

÷ சென்னை நகரின் குடிநீருக்கு ஆதாரமாக விளங்கும் பூண்டி ஏரி கடந்த நவம்பர், டிசம்பர் மாதம் பெய்த வடகிழக்கு பருவமழையாலும், ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீராலும் முழு அளவை எட்டியிருந்தது.

÷டிசம்பர் மாதத்தில் ஏரியின் மொத்த உயரமான 35 அடி நீர் மட்டத்தை எட்டியது. இதையடுத்து பூண்டியில் இருந்து செம்பரம்பாக்கம், செங்குன்றம், சோழவரம் ஏரிகளுக்கு நீர் திறந்து விடப்பட்டது.

÷மேற்கண்ட 3 ஏரிகளும் நிரம்பியதால் பூண்டி ஏரியின் உபரி நீர் ஆரணி ஆற்றின் வழியாக கடலுக்கு திறந்து விடப்பட்டது.

÷இந்நிலையில் கடந்த ஜனவரி மாதம் முதல் வாரத்தில் ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து தமிழகத்துக்கு திறந்து விடப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டது.

÷இந்நிலையில் மொத்த உயரமான 35 அடி நீர்மட்டத்தில் இருந்த பூண்டி ஏரி ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி 33.84 அடியாக குறைந்திருந்தது.

÷தற்போது இங்கிருந்து மழலைக் கால்வாய் வழியாக சென்னை குடிநீரேற்று நிலையத்துக்கு வினாடிக்கு 10 கன அடி நீரும், இணைப்புக் கால்வாய் வழியாக செங்குன்றம் ஏரிக்கு வினாடிக்கு 90 கன அடி நீரும் திறந்து விடப்பட்டுள்ளது.

÷இதே நிலை நீடித்தால் பூண்டி ஏரியின் நீர்மட்டம் விரைவில் கணிசமாகக் குறையும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

முட்டை விலை 5 காசு உயர்வு

First Published : 20 Feb 2011 12:18:19 PM IST

நாமக்கல், பிப்.19: நாமக்கல்லில் முட்டை ஒன்றின் விலை 5 காசு உயர்த்தி ரூ.2.15 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

நாமக்கல்லில் சனிக்கிழமை நடைபெற்ற தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு ஆலோசனைக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

ஹைதராபாத், விஜயவாடா மும்பை ஆகிய பெருநகரங்களின் முட்டை நுகர்வு அதிகரித்துள்ளது. இதனால், அந்தந்த நகரங்களில் முட்டை விலை உயர்ந்து வருகிறது. சில வாரங்களுக்கு முன் நாமக்கல்லில் முட்டை தேக்கம் ஏற்பட்டது. இப்போது தேங்கிய முட்டைகள் எல்லாம் விற்பனையாகிவிட்டன.

எனவே, தேவைப்பாடு அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளது என்று தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் நாமக்கல் மண்டலத் தலைவர் பி.செல்வராஜ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**நெல் கொள்முதல் மையம் திறக்கக் கோரிக்கை**

First Published : 20 Feb 2011 12:40:10 PM IST

பழனி. பிப். 19: பழனியை அடுத்த கிழக்கு மற்றும் மேற்கு ஆயக்குடி பகுதிகளில், நெல் கொள்முதல் மையத்தை விரைவில் திறக்க வேண்டும் என, முன்னாள் எம்.எல்.ஏ.வும், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் துணைத் தலைவருமான பழனிவேலு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து, அவர் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியருக்கு விடுத்துள்ள கோரிக்கைக் கடிதத்தில் கூறியுள்ளதாவது:

பழனி வட்டம் வரதமா நதிக்கு உள்பட்ட நெல் சாகுபடி நிலங்களில், தற்போது நெற்பயிர் அறுவடை பருவத்துக்கு வந்துள்ளது. இதனால், கிழக்கு மற்றும் மேற்கு ஆயக்குடி பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெற்பயிரை உடனடியாக விற்பனை செய்யக்கூடிய சூழலில் உள்ளனர். காலதாமதமாக நெல் கொள்முதல் மையம் திறக்கப்படும்பட்சத்தில், விவசாயிகள் நெல் மூட்டைகளை வீடுகளுக்கு கொண்டு வரமுடியாத நிலை ஏற்படும். இதனால், விவசாயிகள் வியாபாரிகள் கேட்கும் விலைக்கு விற்க வேண்டி வருகிறது.

எனவே, விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும் வகையில், மாவட்ட நிர்வாகம் பழைய ஆயக்குடி மற்றும் புதுஆயக்குடி ஆகிய இரண்டு பகுதிகளிலும் தனித் தனியே நெல் கொள்முதல் மையங்களை மார்ச் 1-ம் தேதிக்குள் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

**செந்துறை சேமிப்புக் கிடங்கு கட்டுமானப் பணி ஆய்வு**

First Published : 20 Feb 2011 01:45:12 PM IST

அரியலூர், பிப். 19: அரியலூர் மாவட்டம், செந்துறையில் அமைக்கப்படும் சேமிப்புக் கிடங்கின் கட்டுமானப் பணிகளை வேளாண் துணை இயக்குநர் சிவசங்கரன் அண்மையில் ஆய்வு செய்தார்.

வேளாண் வணிகத் துறை சார்பில், நீர் வள நில வளச் திட்டத்தின் கீழ், ஆனைவாரி ஓடை உப வடிநிலப் பகுதித் திட்டத்தில் செந்துறையில் ரூ. 17.80 லட்சம் செலவில் கட்டப்பட்டு வரும் சேமிப்புக் கிடங்கு மற்றும் உலர்களம் கட்டுமானப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

இந்தப் பணிகளை அண்மையில் பார்வையிட்ட வேளாண் துணை இயக்குநர் சிவசங்கரன், பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மேலும், இந்தச் சேமிப்புக் கிடங்கு, உலர்களம் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றவுடன் விவசாயிகளின் பயன்பாட்டுக்கு விடப்படும்.

இந்த கிடங்கில் தராசு, தார்ப் பாய், ஈரமானி போன்றவைகளும் அமைக்கப்படும் என்றார் அவர்.

ஆய்வின்போது, வேளாண் வணிக அலுவலர்கள் ரமேஷ், எழிலரசன், முருகேசன், வேளாண் வணிக உதவி அலுவலர்கள் இளவரசன், தமிழ்ச்செல்வன், அரவிந்தன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினமலர்

**ஆற்றில் நீந்தி சென்று விவசாயம் செய்யும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,01:00 IST

சா.ஜோதிலிங்கம் / செய்யூர் ;அரசூர் அருகே ஓங்கூராற்றில் பாலம் இல்லாததால், விவசாயிகள் ஆற்றில் நீந்திச் சென்று விவசாயம் செய்ய வேண்டியுள்ளது.

சித்தாமூர் ஒன்றியம் வன்னியநல்லூர் ஊராட்சிக்குட்பட்டது அரசூர் கிராமம். இங்கு 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களின் முக்கியத் தொழில் விவசாயம்.ஆற்றங்கரையில் கிராமம் அமைந்துள்ளதால் மூன்று போகம் பயிரிடுகின்றனர். ஓங்கூராற்றில் பல ஆண்டுகளுக்கு முன் தடுப்பணை கட்டப்பட்டு, கால்வாய் மூலம் இல்லீடு, சூனாம்பேடு ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது.தடுப்பணை கட்டப்பட்டுள்ளதால் ஆற்றில் பெரும்பாலான மாதங்களுக்கு தண்ணீர் தேங்கியிருக்கும். அரசூர் கிராமத்தைச் சேர்ந்த

50க்கும் மேற்பட்ட விவசாயிகளின் நிலங்கள், ஆற்றின் மறுபுறம் ஈசூர் எல்லையில் உள்ளன. மழைக் காலத்தில் ஆற்றில் வெள்ளம் செல்லும். அப்போது விவசாயிகள் ஆற்றில் நீந்தி சென்று விவசாயம் செய்ய வேண்டியுள்ளது.அறுவடை காலத்தில் நெற்பயிரை மூட்டைகளில் கட்டி, தண்ணீரில் நனையாதபடி தலையில் சுமந்து வருகின்றனர். ஆற்றில் வெள்ளம் வடிந்ததும், வைக்கோலை டிராக்டர் மூலம் ஊருக்கு எடுத்து வருகின்றனர்.கடந்த மழையின்போது ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தில், விவசாய நிலத்திற்கு சென்ற விவசாயி அர்ஜுணன் நீரில் மூழ்கி இறந்தார். ஆற்றைக் கடந்தால், அங்கிருந்து 20 கி.மீ. தூரத்தில் திண்டிவனம் அமைந்துள்ளது. ஆற்றங்கரையிலிருந்து ஆவணிப்பூர் வரை 5 கி.மீ., தூரம் சைக்கிள் அல்லது மோட்டார் சைக்கிளில் சென்றால், அங்கிருந்து பஸ் மூலம் திண்டிவனத்திற்கு எளிதாக சென்று வர முடியும். அரசூரிலிருந்து, ஈசூர், தொழுப்பேடு வழியாக பஸ்சில் சென்றால் 40 கி.மீ.,தூரம் செல்ல வேண்டும்.பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் நலன்கருதி ஓங்கூராற்றில் மேம்பாலம் கட்ட மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,01:40 IST

சிதம்பரம் : சிதம்பரம் அருகே வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. சிதம்பரம் கோட்டத்தில் உளுந்து பயிறு வகைகளுக்கு வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறை மூலம் பொருட்குழு துவங்கப்பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வடஹரிராஜபுரம், சொக்கன்கொல்லை, தம்பிக்குநல்லாண் பட்டினம், வில்லியநல்லூர், மேல பருத்திக்குடி, கீழப்பருத்திக்குடி, நளன்புத்தூர், வெட்சியூர், இளங்கமூர் ஆகிய கிராமங்களில் குழுக்கள் துவங்கி பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அறுவடை பின் நேர்த்தி, தொழில் நுட்பங்கள், கூடுதல் விலை பற்றிய சந்தை நிலவர விவரங்கள் மற்றும் உழவர் சந்தையின் பயன்கள் பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் அலுவலர் சித்ரா பயிற்சியளித்தார் ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் ராயர், ராயப்ப நாதன், முத்து சவரணன், ரமேஷ், கலியமூர்த்தி ஆகியோர் செய்திருந்தனர்.

**காய்கறிகள் தின விழா**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,01:35 IST

கடலூர் : கடலூர் திருப்பாதிரிப்புலியூர் ஆப்பிள் கிட்ஸ் மழலையர் பள்ளியில் காய்கறிகள் தின விழா நடந்தது.பள்ளி நிர்வாகி ஜெயந்தி தலைமை தாங்கினார். மழலைகள் தங்கள் வீட்டில் இருந்து பலவிதமான காய்கறிகளை கொண்டு வந்தனர். காய்கறிகளின் பெயர்கள், அவற்றை உண்பதால் ஏற்படும் ஆரோக்கியம் ஆகியவை குறித்து ஆசிரியர்கள் விளக்கம் அளித்தனர்.

**பெண்களுக்கு மீன் உணவு தயாரித்தல் பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,01:40 IST

பரங்கிப்பேட்டை : பரங்கிப்பேட்டையில் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தேசிய மீன் வள மேம்பாட்டு வாரியம் சார்பில் மீனவ பெண்களுக்கு மதிப்புக்கூட்டிய மீன் உணவு பொருட்கள் தயாரித்தல் பயிற்சி முகாம் நடந்தது. திட்ட ஒருங்கிணைப்பாளர் வேல்விழி தலைமை தாங்கினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக கடல்வாழ் உயிரின ஆராய்ச்சி மைய புல முதல்வர் பாலசுப்ரமணியன் துவக்கி வைத்தார். திட்ட அலுவலர் இளங்கோவன், கிராம அறிவு மையத்தின் செயல்பாடுகள் மற்றும் மதிப்புக்கூட்டிய மீன் உணவு பொருட்கள் தயாரித்தல் பயிற்சி முக்கியத்துவம் பற்றி விளக்கினார்.கடல்வாழ் உயிரின ஆராய்ச்சி மைய பேராசிரியர்கள் கோபாலகிருஷ்ணன், சரவணக்குமார் பங்கேற்றனர். வீரராஜ் நன்றி கூறினார்.

**நீர் வளப் பாதுகாப்பு இயக்கம் திண்டிவனத்தில் ஆலோசனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,01:32 IST

திண்டிவனம் : ஏரி குளம் நீர்வளப் பாதுகாப்பு இயக்க ஆலோசனைக் கூட்டம் திண்டிவனத்தில் நடந்தது. மாவட்ட அமைப்பாளர் தமிழ்வேங்கை தலைமை தாங்கினார். ம.தி.மு.க., மாநில பொருளாளர் டாக்டர் மாசிலாமணி, நகர செயலாளர் இஸ்மாயில், அ.தி.மு.க., நகர செயலாளர் வெங்கடேசன், முன்னாள் கவுன்சிலர் பிரபாகரன், நகர காங்., தலைவர் வினாயகம், முன்னாள் கவுன்சிலர் ஏழுமலை, வக்கீல் ராஜகணபதி, நகராட்சி கவுன்சிலர் பூபால், த.மு.மு.க., மாவட்ட தலைவர் முஸ்தாக்தீன், மாவட்ட துணைத் தலைவர் அலாவுதீன், சமூக சமத்துவப் படையின் மாவட்ட செயலாளர் கிருஷ்ணன், மாவட்ட செயலாளர் ராதிகா, தி.மு.க., சார்பில் காளிதாஸ், தேசிய மனித உரிமை இயக்கத்தின் மாநில அமைப்பாளர் ஜப்பார், நகர கல்வி மேம்பாட்டுக்குழு சார்பில் வக்கீல் வெங்கடேசன், பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்க துணைத் தலைவி சிவகாமி உள்பட பலர் கலந்துகொண்டனர். திண்டிவனம் வட்ட ஒருங்கிணைப்பாளர் பிரபாகல்விமணி

விளக்கவுரை யாற்றினார். திண்டிவனம்-முருங்கப்பாக்கம் ஏரியில் புதிய பஸ் நிலையம் அமைக்கும் முயற்சியை தமிழக அரசு கைவிட வேண்டும். திண்டிவனம் அருகில் "சிப்காட்' தொழிற்சாலை கொண்டு வருவதை கைவிட வேண்டும்.திண்டிவனத்தில் அகல்குளம், தீர்த்தக்குளம், நாகலாபுரம் குளத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற் றப்பட்டன.

**வேளாண் அறிவியல் நிலையத்தில் காய்கறி சாகுபடி பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,01:28 IST

திண்டிவனம் : திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு "துல்லிய பண்ணைய காய்கறி சாகுபடி' பயிற்சி நடந்தது. திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் நல்லாவூர் உபவடிநீர் பாசன நீர்வள நிலவளத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் விவசாயிகளுக்கு "துல்லிய பண்ணைத்தில் காய்கறி சாகுபடி' குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் அறிவியல் நிலையத்தின் தலைவர் டாக்டர் சாத்தையா பயிற்சியை துவக்கி வைத்தார்.

சொட்டு நீர் பாசனத்தின் நன்மைகள் குறித்து திட்ட விஞ்ஞானி டாக்டர் பிரபு விளக்கினார். காய்கறி பயிர்களில் ஏற்படும் நோய்கள் மற்றும் பூச்சிக் கட்டுப்பாடுகள் குறித்து பயிர் நோயியல் துறை உதவி பேராசிரியர் டாக்டர் செந்தில்வேல், காய்கறி பயிர்களில் உயிர் உரங்களின் பயன்பாடுகள் குறித்து டாக்டர் உமாசங்கரேஸ்வரி மற்றும் காய்கறி சாகுபடி முறைகள் குறித்து வித்யா உள்ளிட்டோர் விளக்கினர். துல்லிய பண்ணை வயல்களில் செயல்முறை விளக்கத்தை வட்டார ஆராய்ச்சியாளர்கள் இளங்கோ, ஆறுமுகம் செய்து காண்பித்தனர். நல்லாவூர், கொடூர், சேமங்கலம், கட்டளை கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்துக் கொண்டனர்.

**சருகு நோயால் செவ்வாழை விளைச்சல் கடும் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,01:21 IST

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் சருகுநோய் ஏற்பட்டுள்ளதால் செவ்வாழை விளைச்சல் கடுமையாக பாதித்துள்ளது. சத்தியமங்கலம் பகுதியில் உள்ள விவசாயிகள் வாழை அதிகமாக பயிரிட்டுள்ளனர். பூவன், தேன், கதளி, ரஸ்தாளி, பச்சைநாடா மற்றும் ரொபஸ்டா என பல்வேறு ரக வாழைகள் இருந்தாலும், விலை கூடுதலாக கிடைப்பதால் பெரும்பாலான விவசாயிகள்

செவ்வாழை பயிரிட்டுள்ளனர். தற்போது செவ்வாழை வளர்ந்து அறுவடை செய்யும் நிலையில் உள்ளது. ஆனால், செவ்வாழையில் சருகு நோயால் பாதிக்கப்பட்டுள்ளது. சாதாரணமாக ஒரு வாழையில் சராசரியாக 30 முதல் 50 பழங்கள் வரை ஈன்றும். தற்போது அதிகபட்சம் 20 பழங்கள் மட்டுமே ஈன்றுள்ளது. இதனால் செவ்வாழை விலை அதிகரித்துள்ளது. உற்பத்தி பாதித்துள்ளதால் செவ்வாழை விவசாயிகள் மற்ற ரக வாழைக்கு மாறிவருகின்றனர்.

**எண்ணெய் விலை சரிவு தே.பருப்பு விலை மந்தம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,01:17 IST

கோபிசெட்டிபாளையம்: எண்ணெய் மார்க்கெட்டில் தேங்காய் எண்ணெய் விலை குறைந்ததால், மூலப்பொருளான தேங்காய் பருப்பின் விலையும் திடீரென சரிந்தது. தேங்காய்க்கு நேரடி தேவை அதிகரிப்பு, தொடர் மழை மற்றும் கடும் பனி காரணமாக இரண்டு மாதங்களாக தேங்காய் பருப்பு உற்பத்தி குறைந்தது. தேங்காய் பருப்பின் விலை படிப்படியாக உயர்ந்து, சென்ற வாரம் கிலோ 70 ரூபாயை தாண்டியது. விவசாயிகள் தேங்காய் பருப்பை அதிகளவில் உற்பத்தி செய்யும் நடவடிக்கையில் இறங்கினர். எண்ணெய் மார்கெட்டில் தேங்காய் எண்ணெய் 15.5 லிட்டர் கேன் 30 ரூபாய் வரை விலை குறைந்தது. எண்ணெய் ஆலைகளில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி கணிசமாக குறைந்தது. இதனால், தேங்காய் பருப்பு கொள்முதலில் ஆலை உற்பத்தியாளர்கள் ஆர்வம் காட்டாததால், விலை குறையத் துவங்கியுள்ளது. கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு நடப்பு வாரம் 218 மூட்டை தேங்காய் பருப்பு ஏலத்துக்கு வந்தது. அதிகபட்சமாக கிலோ தேங்காய் பருப்பு 66.76 ரூபாய், குறைந்தபட்சமாக 61.56 ரூபாய்க்கு விற்றது. சென்ற வாரத்தை விட 3.83 ரூபாய் விலை குறைந்திருந்தது. நான்கு லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தேங்காய் பருப்பு வர்த்தகம் நடந்தது.

**அந்தியூரில் வெங்காயம் சாகுபடி அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,01:17 IST

ஈரோடு: அந்தியூர் சுற்று வட்டாரப் பகுதியில் வெங்காயம் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். விளைச்சல் குறைவு, மழை மற்றும் பதுக்கல் காரணமாக, சென்ற மாதம் வெங்காயம் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்தது. இரண்டு மாதத்துக்குப் பின், தற்போது கிலோ 20 ரூபாயாக குறைந்துள்ளது. விலை அதிகரிப்பு காரணமாக, அந்தியூர் மற்றும்

சுற்று வட்டார பகுதிகளான வெள்ளையம்பாளையம், பிரம்மதேசம், காட்டுப்பாளையம், சந்தியபாளையம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில், வெங்காயத்தை விவசாயிகள் அதிகளவில் பயிரிட்டுள்ளனர். மூன்று மாதப் பயிரான வெங்காயம், நாட்டு வெங்காயம் மற்றும் கலப்பின வெங்காயம் என, இரு ரகங்களை கொண்டது. நாட்டு வெங்காயம் அதிக சுவை, நறுமணம் உடைய குணம் கொண்டது. ஆனால், அளவில் மிக சிறியதாக தென்படும். கலப்பின வெங்காயம் சுவை, நறுமணம் குறைந்தும், பெரிய அளவில் காணப்படும். நாட்டு வெங்காயம் அளவில் சிறியதாக இருக்கும் காரணத்தால், அந்தியூர் பகுதி நுகர்வோர் அதிகம் விரும்புவதில்லை. இதனால், நாட்டு வெங்காயத்துக்கு பதிலாக, கலப்பின வெங்காயம் அதிக பரப்பளவில் பயிரிட்டுள்ளனர். கலப்பின வெங்காயம் ஒரு ஏக்கரில் பயிரிட, 20 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. வெங்காயம் ஊன்றுதல், களை எடுத்தல், மருந்து தெளித்தல் ஆகியவை செலவினங்களில் அடங்கும். தண்டுகளின் வளர்ச்சியை பொறுத்தும், வெங்காயம் காம்பிலிருந்து விடுபட்டு கீழே விழுவதை வைத்தும் அறுவடை தருணத்தை தெரிந்து கொள்ளலாம். நோய் தாக்குதல் இல்லாமல் நன்கு வளர்ச்சி பெற்ற வெங்காயம், ஒரு ஏக்கருக்கு நல்ல மகசூல் தரும். ஏக்கர் பரப்பளவில் அறுவடை செய்யப்பட்ட வெங்காயத்துக்கு, 15 ஆயிரம் ரூபாய் வரையில் லாபம் கிடைக்கிறது. வியாபாரி ராஜாமணி கூறியதாவது: மூன்று மாத பயிரமான கலப்பின வெங்காயத்தை, அந்தியூர் பகுதி நுகர்வோர் அதிகளவில் விரும்புகின்றனர். அறுவடை செய்த வெங்காயத்தை, அந்தியூர் வார சந்தையில் விற்பனை செய்வோம். சில வியாபாரிகள் பயிரிட்டுள்ள மொத்த பரப்பளவையும் குத்தகைக்கு பேசி, அறுவடை செய்து கொள்வதும் உண்டு. ஒரு ஏக்கரில் நன்கு வளர்ச்சி பெற்ற வெங்காயத்துக்கு, 15 ஆயிரம் ரூபாய் வரையில் லாபம் கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**சாயக்கழிவு நீர் பாதித்த விவசாயிகளுக்கு ரூ.3.5 லட்சம் இழப்பீடு வழங்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,00:13 IST

கரூர்: ""நொய்யல் ஆற்றில் திருப்பூர் சாயக்கழிவு கலப்பதால் 30 ஆயிரம் ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிக்கு ஏக்கருக்கு 3.5 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்,'' என்று சாயக்கழிவு நீரால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் ராமசாமி பேசினார். சாயக்கழிவு நீரால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்கம் கருத்தரங்கம் நொய்யலில் நடந்தது.விவசாயிகள் சங்கத் தலைவர் நொய்யல் ராமசாமி பேசியதாவது:சாயக்கழிவு நீர் பாதிப்பு சம்பந்தமான பிரச்னையில் உயர்நீதிமன்ற உத்தரவை அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்ந்து சாயக்கழிவு நீர் நொய்யல் ஆற்றில் விடப்படுவது கண்டிக்கத்தக்கது. இதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்நிலை தொடர்ந்தால் விவசாயிகள்

போராட்டம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. நொய்யல் ஆற்றில் திருப்பூர் சாயக்கழிவு கலப்பதால் 30 ஆயிரம் ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டுள்ளது. நிலத்தடி நீரும் கெட்டுவிட்டது. புற்றுநோய் போன்ற நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நிலம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 3.5 லட்சம் ரூபாய் என இழப்பீடு அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். தமிழ்நாடு மாநில விவசாயிகள் சங்க துணை செயலாளர் உ தயகுமார், செல்லதுரை, தர்மராஜ் முன்னிலை வகித்தனர். நடையனூர் பாஸ்கர் வரவேற்றார். தாவரம் மூலம் இயற்கை சாயம் உற்பத்தி செய்தல் குறித்து ராமசாமி பேசினார். "நாட்டு நலனில் சமூக இயக்கம் ' குறித்து கதிர்வேல், களர்நிலம் மற்றும் கழிவு நீரில் மரம் பயிரிடுதல் குறித்து கிருஷ்ணமூர்த்தி, "இதயநோய், சர்க்கரை நோய், ஆஸ்துமா, வலிப்பு நோய்களுக்கு மருந்தில்லா மருத்துவம் குறித்து டாக்டர் பாலசுப்பிரமணியம் பேசினர். கருத்தரங்கில் கழிவு நீரிலும், களர் நிலங்களிலும் ஆண்டுக்கு 30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை லாபம் பெறவும், இதயநோய், சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் மற்றும் பல வியாதிகளுக்கு பக்க விளைவுகளற்ற நிரந்தர குணம் பெறுவது குறித்தும், சாயக்கழிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2010ம் ஆண்டு வரை ஆறாண்டுக்கு நஷ்டஈடு பெற உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்வது குறித்தும் விவாதிக்கப்பட்டது. மேலும், இழப்பீட்டு பட்டியலில் விடுபட்ட நிலங்களுக்கும் நஷ்டஈடு பெற்றுத் தருதல், நிலுவையில் உள்ள வழக்கை விரைவாக முடித்தல் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

**பிப்.,23ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,00:17 IST

கரூர்: கரூர் ஆர்.டி.ஓ., அலுவலகத்தில் வரும் 23ம் தேதி காலை 11 மணிக்கு, மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் உமாமகேஸ்வரி தலைமையில் நடக்கிறது. மாவட்ட விவசாயிகள் அனைவரும் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பங்கேற்று பயன்பெற அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பெறப்பட்ட மனுக்கள் மட்டும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கான பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,23:26 IST

உசிலம்பட்டி:வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில், 25 முதல் 40 வயது வரை உள்ள விவசாயத்தில் ஆர்வம் உள்ளவர்களுக்கு ஒரு வார பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன. சொட்டு நீர், தெளிப்பு நீர், மற்றும் நீர் சேமிப்பு சாதனங்கள் மூலம் நீர் மேலாண்மை குறித்து

பயிற்சிகள் தொட்டப்பநாயக்கனூர் விலக்கு சமுதாயக் கூடத்திலும், பயிர் பாதுகாப்பு கருவிகள்-தெரிவு, இயக்கம், பராமரிப்பு குறித்த பயிற்சிகள் சீல்நாயக்கன்பட்டி ஊராட்சி அல்லமநாயக்கன்பட்டி சமுதாயக்கூடத்திலும் நாளை பிப்.22 முதல் பிப். 28 வரை நடக்க உள்ளது. கலந்து கொள்ள விரும்பும் விவசாயிகள் உசிலம்பட்டி தேனி ரோடு, காளைத்தேவர் நகரில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலக உதவி செயற்பொறியாளரை 04552-253 604 ல் தொடர்பு கொள்ளலாம்.

**நெல்கொள்முதல் மையம் திறப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,23:25 IST

முள்ளிப்பள்ளம்:சோழவந்தான் அருகே முள்ளிப்பள்ளத்தில் நெல்கொள்முதல் மையம் திறக்கப்பட்டது. சோழவந்தான் வெற்றிலை பயிரிடுவோர் கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில் துவக்கப்பட்ட மையத்திற்கு ஊராட்சி தலைவர் மா.லட்சுமி தலைமை வகித்தார். சங்க செயலாளர் குபேந்திரன் துவக்கி வைத்தார். துணைசெயலாளர் சரவணன் வரவேற்றார். விவசாயிகள் மார்நாட்டான், அழகுமலை மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**பருவம் தவறி பெய்யும் மழைவிவசாயம் பாதிக்கும் அபாயம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,21:55 IST

தாண்டிக்குடி:தாண்டிக்குடி மலைப்பகுதியில் பருவம் தவறி பெய்யும் தற்போதைய மழையால் விவசாயம் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.கடந்த சில தினங்களாக வெயிலின் தாக்கம் குறைந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகளை மாலை நேரத்தில் சாரல் மழை பெய்து இரவில் இடி, மின்னல் அதிகரித்து மழை பெய்கிறது.இம்மழையால் காபி, ஆரஞ்சு, மிளகு விவசாயம் பாதிக்கும் அபாயம் உள்ளது. கோடை காலத்தில் செடிகள் வாடி பின் பூ பூப்பது வழக்கம் தற்போது பெய்யும் மழைக்கு அரும்பு உருவாகி இலை அரும்புகளாக மாறும் நிலை ஏற்படும். அவரை, பீன்ஸ் உள்ளிட்ட பயிர்களுக்கு ஏற்ற மழையாகவும், இதன் காரணமாக பனியின் தாக்கம் குறைந்துள்ளது.

**நபார்டு திட்டப்பணிகளைகண்காணிக்க இருநபர் குழு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,22:14 IST

தேனி:தேனி மாவட்டத்தில் நபார்டு வங்கி நிதி உதவி மூலம் நடக்கும் பணிகளை கண்காணிக்க விவசாய இணை இயக்குனர் தலைமையில் இருநபர் குழு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் நபார்டு திட்டத்தின் கீழ் பல கோடி ரூபாயில், தடுப்பணைகள் கட்டுதல், கம்பிவலை தடுப்பணைகள் கட்டுதல், வரப்புகளை உயர்த்துதல், பண்ணைக்குட்டைகள் அமைத்தல், நிலங்களை சீரமைத்தல் போன்ற பல பணிகள் நடந்து வருகின்றன. மிகவும் சிறிய பணிகளாக இருப்பதால் இதில் முறைகேடுகள் நடக்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே பணிகளை கண்காணிக்க விவசாய இணை இயக்குனர் ராமகிருஷ்ணன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் திரவியம் ஆகியோர் கொண்ட இருநபர் குழுவினை கலெக்டர் முத்துவீரன் அமைத்துள்ளார்.இக்குழுவினர் பணிகள் நடக்கும் முன்னரே தேர்வு செய்யப்பட்ட இடத்திற்கு சென்று நேரடியாக ஆய்வு செய்வதோடு, பணிகள் நடக்கும் போதும், பணிகள் முடிந்த பின்னரும் கள ஆய்வு செய்து கலெக்டருக்கு அறிக்கை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.இக்குழுவினர் தற்போது சின்னமனூர், சீப்பாலக்கோட்டை, ஓடைப்பட்டி பகுதிகளில் ஆய்வு நடத்தி வருகின்றனர்.

**உரங்கள் விற்பனைக்கு தயார்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,22:12 IST

தேனி:விவசாய விரிவாக்க மையங்களில் மாவட்டத்திற்கு தேவையான விதைகள், உரங்கள் விற்பனைக்கு தயாராக உள்ளன. நெல் விதைகள் 31 டன், சிறுதானிய விதைகள் ஒரு டன், பயறு வகை விதைகள் 28 டன், பருத்தி விதைகள் 500 கிலோ, எண்ணெய் வித்துக்கள் 4 டன் இருப்பு உள்ளது. தேவைப்படும் விவசாயிகள், விரிவாக்க மையங்களை அணுகி, விதைகளை பெற்றுக்கொள்ளலாம்.மாவட்டம் முழுவதும் 1783 டன் யூரியா, 427 டன் டி.ஏ.பி., 1345 டன் பொட்டாஷ், 1200 டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் கூட்டுறவு சங்கங்கள், மற்றும் தனியார் கடைகளில் இருப்பு உள்ளது. உரங்கள் விற்பனையை கண்காணிக்க விவசாயத்துறை அலுவலகத்தில் கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அதிக விலைக்கு உரங்கள் விற்பனை செய்பவர்கள் பற்றி விவசாயிகள் புகார் செய்யலாம் என விவசாயத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**தென்னை சாகுபடியை அதிகரிக்க திட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,22:10 IST

தேனி:மாவட்டத்தில் தென்னை சாகுபடியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக விவசாயிகளுக்கு ஐம்பது சதவீதம் மானிய விலையில் தென்னங்கன்றுகள் வழங்கப்பட உள்ளன. மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்,கலெக்டர் முத்துவீரன் தலைமையில், கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. டி.ஆர்.ஓ., பிருந்தாதேவி, விவசாயத்துறை இணை இயக்குனர் ராமகிருஷ்ணன் உட்பட பலர் பங்கேற்றனர். கலெக்டர் பேசியதாவது:குளிர்கால மழை கடந்த ஆண்டைக்காட்டிலும் குறைவாக பெய்துள்ளது. 17 ஆயிரத்து 764 ஹெக்டேரில் நெல், 26 ஆயிரத்து 850 ஹெக்டேரில் சிறுதானியங்கள், 13 ஆயிரத்து 300 ஹெக்டேரில், பயறுவகைகள், 1,272 ஹெக்டேரில் பருத்தி, 5,984 ஹெக்டேரில் கரும்பு, 3,277 ஹெக்டேரில் நெல், 37ஆயிரத்து 650 ஹெக்டேரில் தோட்டப்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.அணைகளில் ஓரளவு நீர் இருப்பு உள்ளது. விவசாயிகள் கட்டாயம் பயிர்க்காப்பீடு செய்ய வேண்டும். தென்னை சாகுபடியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சாகுபடி பரப்பளவை அதிகரிக்க 50 சதவீதம் மானியத்தில், தரமான உயர்தர தென்னங்கன்றுகள் வழங்கப்பட உள்ளன என்றார்.

**கொத்துக் கொத்தாய் பலியான மாடுகள் ஆய்வுக் கூடத்தில் புற்கள் பரிசோதனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,23:17 IST

அவனியாபுரம்:மதுரை அருகே விஷப்புல் மேய்ந்ததால், அடுத்தடுத்து செத்து மடிந்த 39 பசுமாடுகள் கண்மாய் கரை அருகே ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்டன.மதுரை மேலமடை வேம்பு,கோவிந்தன், அவனியாபுரம் சேதுராமன், மணி, தங்கம், பாலுச்சாமி, விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி கோபாலகிருஷ்ணபுரம் கண்ணன், மோகன் ஆகியோருக்கு சொந்தமான ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகளை, கூலியாட்கள் ஐந்து நாட்களாக அவனியாபுரம் மண்டேலா நகர் பகுதியில் கிடை அமர்த்தி மேய்த்து வருகின்றனர். நேற்றுமுன்தினம் மாடுகள் மேய்ந்துவிட்டு, அருகில் உள்ள கண்மாயில் தண்ணீர் குடித்து, தொழுவத்திற்கு ஆறுமணிக்கு சென்றன. சிறிது நேரத்தில் சில மாடுகள் திடீரென வாயில் நுரை வந்தும், நாக்கு நீண்டும் ஒன்றன்பின் ஒன்றாக இறந்தன.பல மாடுகள் தொழுவத்தில் இருந்து வெளியில் ஓடின. இதைக்கண்டு மாடு மேய்ப்பவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். ஆபத்தான நிலையில் இருந்த மாடுகளுக்கு, அவனியாபுரம் கால்நடை டாக்டர் ஸ்ரீசாய் முதலுதவி செய்ததில் எட்டு மாடுகள் உயிர் பிழைத்தன. தொழுவத்தில் 25 மாடுகள் இறந்து கிடந்தன. நேற்றுமுன்தினம் இரவாகிவிட்டதால், ஓடிய மாடுகள் எங்கு சென்றன என்பது தெரியவில்லை.

நேற்று காலை அவனியாபுரம் நகராட்சி தலைவர் போஸ்முத்தையா சம்பவ இடத்திற்கு சென்று, இறந்த மாடுகளை ஓரிடத்தில் சேர்க்க நடவடிக்கை எடுத்தார். தொழுவத்தில் இருந்து இரண்டு கி.மீ., தூரம்வரை மாடுகள் இறந்து கிடந்தன. ஒருமாடு ஒரு கி.மீ., தூரத்தில் உள்ள கிடங்கில்

தண்ணீரை குடித்தநிலையில் இறந்து கிடந்தது. சுற்றிலும் இறந்து கிடந்த மாடுகள் ஜே.சி.பி., மூலம் கண்மாய் கரைக்கு எடுத்து வரப்பட்டன. கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் டாக்டர் காஜா முகைதீன் தலைமையில், கால்நடை நோய் புலனாய்வு பிரிவினர் ஏழு உதவி மருத்துவ அலுவலர்கள் கொண்ட மருத்துவ குழுவினர் இறந்த மாடுகளை பிரேத பரிசோதனை நடத்தினர். கண்மாய் கரை அருகே பள்ளம் தோண்டப்பட்டு, இறந்த மாடுகள் அடக்கம் செய்யப்பட்டன. உரிமையாளர்கள் மாடுகளின் மீது புது வேட்டியால் போர்த்தி, மஞ்சள்பொடி, பூ போட்டு கதறி அழுதனர். இன்ஸ்பெக்டர் குருவெங்கட்ராஜ் தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். பிராணி மித்ரன் தலைவர் வள்ளியப்பன், செயலாளர் வெங்கடேஷன் மேற்பார்வையிட்டனர். கால்நடை டாக்டர்கள் கூறுகையில், "இறந்த மாடுகளில் இருந்து மாதிரி எடுக்கப்பட்டுள்ளது. அதை சென்னை கால்நடை மருத்துவ பல்கலைக்கு அனுப்பப்படும். மதுரையில் ஆய்வுக்கூடத்தில் சோதிக்கப்படும். கண்மாய் தண்ணீரில் உள்ள மீன்கள், தவளைகள் நன்றாக உள்ளதால், அதில் விஷம் இல்லை. கண்மாய் அருகே உள்ள புல்களில் தான் பிரச்னை. ஆய்வுக்குப் பின்னர்தான் காரணம் தெரியவரும்,' என்றனர்.

மாடுகள் மேய்ந்த புற்கள் விஷத்தன்மை உள்ளதா அல்லது அந்த புற்களில் ரசாயன கழிவுகள் கொட்டப்பட்டு உள்ளதா, என்பதை கண்டறிய புற்களும் ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பியுள்ளனர்.மாடுகளின் உரிமையாளர்கள் கூறுகையில், "அந்த புல் அருகே சென்றபோது மருந்து வாசம் அடித்தது. அந்த புல்லை சாப்பிடதால் மாடுகள் இறந்திருக்க வாய்ப்புள்ளது. தொழுவத்தில் இருந்து ஓடிய மாடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பது தெரியவில்லை. வெகுதூரம் ஓடிய மாடுகளின் நிலை தெரியவில்லை. உயிருடன் உள்ள மாடுகள் மேய்ச்சலுக்கு சென்றுவிட்டன. இன்று மாலை தொழுவத்திற்கு வந்தபின்,தான் எத்தனை மாடுகள் இறந்தன என்பது தெரியும். இந்த மாடுகளை நம்பித்தான் பிழைக்கிறோம். இறந்த மாடுகளுக்கு அரசு நஷ்ட ஈடு வழங்க வேண்டும்,' என்றனர்.

**பஞ்சகவ்யம் பயன்படுத்த வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,23:47 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பயிர்களில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த, பஞ்சகவ்யம் பயன்படுத்த வேண்டும் என, வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது. தமிழகத்தில் உள்ள நூற்பாலைகளுக்கு, 70 லட்சம் பேல் பருத்தி தேவைப்படுகிறது. தமிழகத்தில் உற்பத்தியாகும் மொத்த பருத்தி, 50 லட்சம் பேல்கள். தமிழகத்தில், பருத்தி உற்பத்தியை அதிகப்படுத்த, தமிழ்நாடு

வேளாண்மை பல்கலையும், தமிழ்நாடு வேளாண்மைத் துறையும் நடவடிக்கை எடுத்து வருகிறது. பருத்தியில் தொழில் நுட்பங்கள், பூச்சிமருந்து மற்றும் ரசாயன உரங்களை குறைத்து, பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த பஞ்சகவ்யம் பயன்படுத்த வேண்டும். விவசாயிகள் தொழுவத்திலும், பண்ணையிலும் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு பயிர் ஊக்கியான பஞ்சகவ்யம் தயார் செய்யலாம். தயிர் ஊறல் ஊட்டமேற்றிய தொழுஉரத்தை பயிர்களுக்கு உபயோகிப்பதால், பூச்சிதாக்குதல் குறைந்து மகசூல் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். பஞ்கவ்யம் எல்லா பயிர்களுக்கும் பயிர் வளர்ச்சி ஊக்கியாகவும், பூச்சிக்கு எதிர்ப்பு கொடுக்கக் கூடியதாகவும் உள்ளதாக பாப்பாரப்பட்டி வேளாண் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

**தோட்டக்கலை பணிகள் கி.கிரி கலெக்டர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,23:53 IST

கிருஷ்ணகிரி: தோட்டக்கலைத்துறை சார்பில், சூளகிரி மற்றும் ஓசூர் வட்டாரங்களில் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளை, கலெக்டர் ஆய்வு செய்தார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நடப்பு ஆண்டில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம், 1,200 ஹெக்டேரில் தோட்டக்கலை பயிர்களுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு, ஹெக்டேருக்கு, 48 ஆயிரத்து 640 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. சூளகிரி வட்டாரம் பேரிகை கிராமத்தில் சென்னப்பா, கரிகுச்சியப்பா என்பவரது வயலில் சொட்டுநீர் பாசனம் அமைத்து, உருளை கிழங்கு பயிர் சாகுபடி செய்துள்ளனர். அதை, கலெக்டர் பார்வையிட்டு, விவசாயிடம் சொட்டுநீர் பாசனம் மற்றும் உருளைக்கிழங்கு சாகுபடிக்கான செலவு மற்றும் வருமானம் குறித்து கேட்டறிந்தார். ஓசூர் வட்டாரத்தில், அச்சந்திரம் கிராமத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்து உருளைகிழங்கு சாகுபடி செய்த விவசாயிகளின் வயலையும் பார்வையிட்டார். ஓசூர் தாலுகாவில் பசுமை குடில் அமைத்து மலர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் மஞ்சுநாத், தொட்டமராமப்பா மற்றும் நரசிம்மையா ஆகியோருக்கு, 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபாயை அரசு மானியாக கலெக்டர் வழங்கினார். ஆய்வின்போது, தோட்டக்கலை துணை இயக்குனர் மோகன், உதவி இயக்குனர் சீனிவாசன், காளியப்பன் ஆகியோர் உடனிருந்தனர். ஆய்வுக்கான ஏற்பாடுகளை, வேளாண்மை உதவி அலுவலர் தமிழரசன், திருமுருகன், கோவிந்தராஜ் ஆகியோர் செய்தனர்.

**உழவர் சந்தையில் வியாபாரிகள் கொள்முதல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,02:24 IST

ஓசூர்: ஓசூர் உழவர்சந்தையில், விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வரும் காய்கறிகளை வியாபாரிகள் மொத்தமாக கொள்முதல் செய்வதால், பொதுமக்களுக்கு தரமான காய்கறிகள், நியாயமான விலையில் கிடைப்பதில்லை. விவசாயிகள் விளைபொருட்களை இடைத்தரர்கள் இல்லாமல், பொதுமக்களிடம் நேரடியாக விற்பனை செய்வதற்காக, தமிழகத்தில் உழவர்சந்தை துவங்கப்பட்டது. ஓசூர் உழவர்சந்தைக்கு தினமும், 100 முதல் 130 டன் வரை காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். உழவர்சந்தையில், வெளிமார்க்கெட் வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள் அதிகாலை 6 மணிக்கு குவிந்து விடுகின்றனர்.

அவர்கள், உழவர்சந்தை அதிகாரிகள் ஆதரவுடன் விவசாயிகள் கொண்டு வரும் காய்கறிகளை ஒட்டுமொத்தமாக வாங்கிச் செல்கின்றனர். கடையில் அமர்ந்து வியாபாரம் செய்யாமல், உடனே பணம் கிடைத்து விடுவதால், காய்கறிகளை வியாபாரிகளுக்கு மொத்தமாக விற்பனை செய்வதிலே விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். வியாபாரிகளுக்கு விற்பனை செய்தது போக மீதம் உள்ள, தரமற்ற மற்றும் கழிவு காய்கறிகள்தான் உழவர்சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது.

சமீப காலமாக உழவர்சந்தைக்கு பொதுமக்கள் வருகையும் குறைந்து விட்டது. பொதுமக்கள் காய்களை மொத்தமாக வாங்கிச் சென்றதாக உழவர்சந்தை அதிகாரிகள் போலியாக கணக்கு காட்டி சமாளிக்கின்றனர். இடைத்தரர்கள், வியாபாரிகளை ஒழிக்கவே, உழவர்சந்தை திட்டம் அமல்படுத்தப்பட்டது. எந்த நோக்கத்திற்காக கொண்டு வரப்பட்டதோ அந்நோக்கம் திசைமாறி உழவர்சந்தையில் ரவுடிகள் துணையுடன் வியாபாரிகள், இடைத்தரர்கள் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

அதனால், பொதுமக்களுக்கு தரமான காய்கறிகள் நியாயமான விலையில் கிடைப்பது கேள்விகுறியாகி விட்டது. உழவர்சந்தையில் இருந்து, 50 மீ., வரை எந்த வியாபார கடைகளும் இருக்க கூடாது என்ற விதிமுறை உள்ளது. ஆனால், உழவர்சந்தை நுழைவு வாயில் மற்றும் சுற்றிலும் காய்கறி, பழக்கடைகள் அதிகளவில் உள்ளன. மாவட்ட நிர்வாகம், உழவர்சந்தையில் காணப்படும் வியாபாரிகள் ஆதிக்கத்தை தடுத்து விவசாயிகளும், பொதுமக்கள பயனடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கூலி ஆட்கள் தட்டுப்பாடு மஞ்சள் அறுவடை பாதிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,23:51 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கூலி ஆட்கள் பற்றாக்குறையால், மஞ்சள் அறுவடை பாதிப்படைந்துள்ளது. தமிழகத்தில், ஈரோடு மாவட்டத்தில் அதிக அளவில் மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது. மற்ற மாவட்டங்களில் பரவலாக மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது. வெப்ப மண்டல பகுதியான கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரியை சுற்றியுள்ள பூசாரிப்பட்டி, கரடிகுறி, வரட்டனப்பள்ளி, பெரிய கோட்டப்பள்ளி, மேகலசின்னம்பள்ளி மற்றும் ஊத்தங்கரை, காவேரிப்பட்டணம், போச்சம்பள்ளி, கல்லாவி ஆகிய பகுதிகளில், 500 ஏக்கருக்கு மேல் மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மஞ்சள், தற்போது அறுவடை செய்யும் நிலையில் உள்ளது. மஞ்சள் அறுவடைக்கு கூலி ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் குத்தகை மூலமும், கூலி பேசியும் மஞ்சள் அறுவடை செய்யப்பட்டது. தற்போது, அனைத்து தொழிலாளர்களும் தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தில் ஏரி தூர்வாரும் பணி போன்ற பணிகளுக்கு செல்கின்றனர்.

சிலர் பெங்களூருவுக்கு கட்டிட வேலைக்கு சென்றுள்ளனர். தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தின் பணியாளர்களாக பதிவு செய்தவர்கள், தொடர்ந்து வேலைக்கு செல்ல வேண்டும் என்ற விதிமுறை உள்ளது. அதனால் தொழிலாளர்கள் அனைவரும் விவசாய வேலைக்கு செல்லாமல் ஏரி தூர் வாரும் வேலைக்கு செல்கின்றர். மேலும், விவசாய வேலைக்கு செல்வதை விட தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் கூலி அதிகமாக கிடைப்பதாலும், வேலை பளு குறைவாக இருப்பதாலும் தொழிலாளர்கள் விவசாய வேலைக்கு செல்வதை தவிர்த்து வருகின்றனர். அதனால், மஞ்சள் அறுவடைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. மஞ்சள் பயிரிட்டுள்ள விவசாயிகள், குடும்ப உறுப்பினர்களை கொண்டே மஞ்சள் அறுவடை பணிகளை செய்கின்றனர். அறுவடை தள்ளி போவதால், மஞ்சளின் தரம் பாதிக்கப்பட்டு விலை குறைகிறது. தற்போது, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இரவு நேரங்களில் மும்முனை மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதால், மஞ்சள் பயிருக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலையும் உள்ளது.

கூலி ஆட்கள் பற்றாக்குறை மற்றும் மின் தடையால் மஞ்சள் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர். பூசாரிப்பட்டியை சேர்ந்த விவசாயி ரமேஷ்குமார் கூறியது: பூசாரிப்பட்டி பகுதியில் நிலத்தடி நீர்மட்டத்தை கொண்டு, அதிக பரப்பில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அறுவடை நேரத்தில் கூலி ஆட்கள் வராததால், விடுமுறை நாட்களில் குடும்பத்தினரை கொண்டு அறுவடை செய்து வருகிறேன்.பூசாரிப்பட்டி பகுதியில் இரவில் மும்முனை மின்சாரம் அடிக்கடி தடைபடுகிறது. இதனால் மஞ்சள் பயிருக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை உள்ளது. அறுவடை செய்யப்பட்ட மஞ்சளை வேக வைக்கவும், கூலி ஆட்கள்

வருவதில்லை. அறுவடை செய்யபட்ட மஞ்சளை வேக வைக்க முடியாமல், நீண்ட நாட்கள் குவித்து வைக்கப்பதால் மஞ்சளின் தரம் குறைந்து விலை குறைகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**முட்டை விலை அதிகரிக்க வாய்ப்பு நாமக்கல் மண்டல சேர்மன் தகவல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,01:22 IST

நாமக்கல்: "தமிழகம், கேரளாவில் முட்டைக்கான தேவை அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே, முட்டை விலை அதிகரிக்கும்' என, தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு நாமக்கல் மண்டல சேர்மன் செல்வராஜ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் முட்டை விலை நிர்ணய ஆலோசனைக் குழுக் கூட்டம் சங்க அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்தில் ஹைதராபாத், விஜயவாடா, மும்பை உள்ளிட்ட நகரங்களில் முட்டை நுகர்வு ஓரளவு அதிகரித்துள்ளது. அதைத்தொடர்ந்து அந்தந்த இடங்களில் முட்டை விலை உயர்ந்து வருகிறது. நாமக்கல்லில் இருந்து ஏற்றுமதியாகும் முட்டை அதிகரித்ததாலும், முட்டை தேக்கம் முற்றிலும் அகன்றதாலும், அதன் தேவை அதிகரித்துள்ளது. எனவே, முட்டைத் தேவையை கருத்தில் கொண்டு முட்டை விலையை ஐந்து பைசா உயர்த்தி, 215 பைசாவாக பண்ணையாளர்களின் ஒப்புதலோடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தமிழகம், கேரளாவில் முட்டைக்கான தேவை அதிகரிக்க வாய்புள்ளதால், இனி வரும் நாட்களில் முட்டை விலை ஏற வாய்ப்புள்ளது. இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கனகபுரம் பகுதியில் சுரைக்காய் சாகுபடி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,02:28 IST

ஈரோடு: கனகபுரம், வெள்ளோடு வட்டாரத்தில், சுரைக்காய் சாகுபடி அதிகம் நடக்கிறது. கோபி, கவுந்தப்பாடி, பூந்துறை, நசியனூர், வெள்ளித் திருப்பூர், டி.என்.பாளையம் பகுதியில் காய்கறி பயிர் அதிகம் பயிராகிறது. தற்போது, சுரைக்காய், புடலை, அவரைக்காய், கத்தரிக்காய் போன்றவை சீஸன் நேரம். கனகபுரம், வெள்ளோடு, ஓடக்காட்டுவலசு, அனுமன்பள்ளி பகுதியில், சுரைக்காய் அதிகளவு பயிரிடப்பட்டுள்ளது. ஓடக்காட்டு வலசு விவசாயி குமாரசாமி கூறியதாவது: எனது தோட்டத்தில் அரை ஏக்கரில் சுரைக்காய் பயிரிட்டுள்ளேன். அரை ஏக்கருக்கு 200 கிராம் விதை போதுமானது. 30 நாளில் செடிகளில் காய்கள் காய்க்கத் துவங்கிவிடும். 30 நாளைக்கு பிறகு, தினமும் காய்கள் காய்ப்பதால், நல்ல வருமானம் பெற முடியும். தினமும் இரண்டு முறை தண்ணீர்

விட வேண்டும். தொடர்ந்து ஆறு மாதத்துக்கு காய்கள் தருவதால் கைமேல் பலன் உண்டு. தற்போது, சீஸனாக இருப்பதால் பெரியளவு காய்கள் வளர்கின்றன. பூச்சியை கட்டுப்படுத்த மருந்து தெளித்து, மாட்டு சாணம், இயற்கை உரம் கலந்து செடிகளுக்கு போடுவதால், காய்கள் அதிகளவில் அறுவடைக்கு வருகின்றன.
இவ்வாறு அவர் கூறினார்.

**ஃபிப்., 23ல் வேளாண் குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,01:20 IST

ஈரோடு: வேளாண் குறை தீர்க்கும் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் ஃபிப்., 25ம் தேதி காலை 10.30 மணிக்கு நடக்கிறது. கலெக்டர் சவுண்டையா தலைமை வகிக்கிறார். விவசாய சங்க பிரநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

**இலவச ஆடு வளர்ப்பு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,01:19 IST

ஈரோடு: வெள்ளாடு வளர்ப்பு மற்றும் வங்கி கடன் உதவி திட்டம் குறித்த பயிற்சி 24ம் தேதி துவங்குகிறது. கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் ராஜமனோகர் கூறியிருப்பதாவது: ஈரோடு வீரப்பன்சத்திரம், கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் சார்பில், லாபம் தரும் வெள்ளாடு வளர்ப்பு மற்றும் வங்கி கடன் உதவி திட்டம் குறித்த பயிற்சி இம்மாதம் 24ம் தேதி நடக்கிறது. பயிற்சி பெற விரும்பும் விவசாயிகள் 0424-229 14 82 என்ற எண்ணில் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**ஈரோடு மாவட்டத்தில் கரும்பு அறுவடை தீவிரம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,01:19 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் பல இடங்களில் கரும்பு அறுவடை தீவிரமடைந்துள்ளது. ஈரோடு மாவட்ட விவசாயிகள் கரும்பு பயிரை அதிகம் பயிரிடுகின்றனர். மாவட்டத்தில் சென்னிமலை, அறச்சலூர், சிவகிரி, கனகபுரம், வெள்ளோடு, சத்தியமங்கலம், கோபி, கொடுமுடி, பவானி, கவுந்தப்பாடி, மொடக்குறிச்சி, சோலார் பகுதியில் கரும்பு பயிர் அதிகம் சாகுபடி

செய்யப்பட்டுள்ளது. தற்போது வெள்ளோடு உள்பட மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் கரும்பு அறுவடை துவங்கியுள்ளது. கனகபுரம் கே.என்.பாளையம் விவசாயி ரவிச்சந்திரன் கூறியதாவது: தற்போது இப்பகுதியில் உள்ள கரும்புகளை வெட்டும் பணி தீவிரமடைந்துள்ளது. இங்கிருந்து "சக்தி சுகர்ஸ்' ஆலைக்கு கரும்பு அனுப்பப்படுகிறது. ஆலையில் இருந்து கரும்புகளை வெட்டுவதற்கு கள்ளக்குறிச்சியில் இருந்து ஆட்கள் வந்துள்ளனர். வெட்டுக்கூலி டன்னுக்கு 450 ரூபாய் கொடுக்க வேண்டும். மீதம் டன்னுக்கு 1,450 ரூபாய் விவசாயிகளுக்கு கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் நல்லசாமி கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் 30 ஆயிரம் ஏக்கர் வரை கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டத்தில் டிசம்பர், ஜனவரி, ஃபிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் கரும்பு அறுவடை அதிகமாக இருக்கும். இந்த ஐந்து மாதம்தான் சீஸன் நேரம். ஆண்டு முழுவதும் கரும்பு பயிரிடப்படுவதால், சில இடங்களில் அறுவடை காலம் மாறுபடுகிறது. கரும்பை வெட்டி, "சக்தி சுகர்ஸ்' ஆலை, "பண்ணாரியம்மன் சுகர்ஸ்' ஆலைகளுக்கு கொண்டு செல்கின்றனர். கரும்பு வெட்டுவதற்கு சம்பந்தப்பட்ட ஆலைகளில் இருந்தே ஆட்கள் வந்து விடுகின்றனர். வெட்டுக்கூலி, லாரி வாடகை போக கரும்பு டன்னுக்கு 1,450 ரூபாய் கிடைக்கிறது. சிவகிரி, கொடுமுடி, ஊஞ்சலூர் பகுதி கரும்பு விவசாயிகள் அறுவடை செய்யப்படும் கரும்புகளை, கரூர் மாவட்டம் புகலூர் "பாரி' சர்க்கரை ஆலைக்கு அனுப்புகின்றனர். இதே பகுதியை சேர்ந்த சில விவசாயிகள் எழுமாத்தூர் "சக்தி சுகர்ஸ்' ஆலைக்கு அனுப்புகின்றனர். சில இடங்களில் கரும்புகளை வெட்ட தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஆத்தூர், கள்ளக்குறிச்சி பகுதியில் இருந்து கூலி தொழிலாளர்களை அழைத்து வர வேண்டியுள்ளது. கரும்புக்கு டன்னுக்கு 2,500 ரூபாய் கிடைக்கும் பட்சத்தில் ஈரோடு மாவட்டத்தில் மேலும் பல ஆயிரம் ஏக்கரில் கரும்பு பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டுவர். இவ்வாறு அவர் கூறினார்.

**சத்தியில் ஃபிப்., 23 முதல் வேளாண் இயந்திர பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,01:19 IST

ஈரோடு: வேளாண் பொறியியல் துறை சார்பில் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் பயன்பாடு பற்றிய பயிற்சி, சத்தி இரண்டாவது அலகு அலுவலகத்தில் ஃபிப்ரவரி 23 முதல் மார்ச் 2 தேதி வரை நடக்கிறது. கலெக்டர் சவுண்டையா தெரிவித்துள்ளதாவது: வேளாண் பொறியியல் துறை சார்பில் கரும்பு சாகுபடியில் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் பயன்பாடு பற்றிய பயிற்சி, உதவி செயற்பொறியாளர், கொடிவேரி அணைக்கட்டு பாசனப் பகுதி மேன்மை மற்றும் நீர் மேலாண்மை திட்ட அலுவலகத்திலும், பவானி மைலம்பாடி சமுதாய கூடத்திலும் ஃபிப்ரவரி 23 முதல் மார்ச் 2ம் தேதி வரை நடக்கிறது. பயிற்சியில் 18 முதல் 45 வயதுக்குட்பட்டவர்கள் கலந்து

கொள்ள வேண்டும். ஆர்வம் உள்ள பவானி, கோபி, சத்தி தாலுகா சேர்ந்த விவசாயிகள் 22ம் தேதி மதியம் 1 மணிக்குள், "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, கோபி' அலுவலகத்தில் தொடர்பு கொள்ள வேண்டும். பதிவேட்டில் பதிவு செய்துள்ள முதல் 20 விவசாயிகள் மட்டுமே பயிற்சியில் கலந்து கொள்ள முடியும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,21:04 IST

கிணத்துக்கடவு : கிணத்துக்கடவு பகுதி தென்னந்தோப்புகளில் "கோகோ' சாகுபடி செய்தால், தென்னை விளைச்சல் அதிகரிக்கும்' என தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் முகமது இக்பால் தெரிவித்துள்ளார்.கோவை மாவட்டத்தில் "கோகோ' பயிரிடுவதற்கான தட்வெட்ப நிலை, மண் வளம் மற்றும் நீர்வளம் ஏற்றதாக உள்ளது. தென்னையில் ஊடுபயிராக "கோகோ' பயிரிடுவதன் மூலம் விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கவுள்ளது. தென்னை விளைச்சல் அதிகரிக்கிறது. ஆண்டுக்கு 800 கிலோ இலைகள் உதிர்வதால், மண்ணில் அங்கக சத்து உயர்கிறது. சிறந்த முறையில் களை கட்டுப்பாடு செய்யப்படுகிறது. மண் அரிமானம் தடுக்கப்படுகிறது. மண்ணின் ஈரப்பதம் காக்கப்படுகிறது. ஒரு ஏக்கரில் "கோகோ' பயிரிடுவதற்கு 200 முதல் 220 நாற்றுகள் தேவைப்படும். நல்ல முறையில் பராமரிப்பு செய்தால், ஆண்டுக்கு மரம் ஒன்றில் இருந்து 2 கிலோ உலர் விதைகள் கிடைக்கும். ஆண்டு விளைச்சல் 400 கிலோ உயரும். ஆண்டு வருமானம் 28 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும். இதில் செலவு போக நிகர லாபம் 20 ஆயிரம் ரூபாய் விவசாயிகளுக்கு கிடைக்கும் என தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் முகமது இக்பால் தெரிவித்துள்ளார்.

**வியாபார நோக்கில் விவசாயம்:துணைவேந்தர் அறிவுறுத்தல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,20:59 IST

கோவை : ""விவசாயிகள் வியாபார நோக்குடன் நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி, பண்ணை வருமானத்தை அதிகரிக்க வேண்டும்,'' என, கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார்.
காய்கறி மற்றும் பழங்களை சந்தைப்படுத்துவதற்கான விவசாய குழுக்களின் கலந்தாய்வு கூட்டம், கோவை வேளாண் பல்கலையில் நடந்தது. சந்தை விரிவாக்கத்துறை பேராசிரியர் ராமநாதன் வரவேற்றார். கலந்தாய்வுக் கூட்டத்தை துவக்கி வைத்து பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி

பேசியதாவது: இந்தியா சுதந்திரம் அடைந்த காலத்தில் 53 மில்லியன் "டன்' உணவு உற்பத்தி செய்யப்பட்டது. தற்போது, 234 மில்லியன் "டன்'களாக உயர்ந்து தன்னிறைவு பெற்றுள்ளது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த போதிலும், விவசாயத்தில் பல்வேறு பிரச்னைகள் உள்ளன. குறிப்பாக, விளைபொருட்களை சந்தை படுத்துவது பெரும் சவாலாக உள்ளது. இதில், விவசாயிகள் போதுமான கவனம் செலுத்துவதில்லை. அதிக உற்பத்திக்கு கவனம் செலுத்தும் விவசாயிகள், கிடைக்கும் விலைக்கு விற்று விடுகின்றனர். விவசாயிகள், வியாபார நோக்குடன் செயல்பட கற்றுக்கொள்ள வேண்டும். கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் துல்லிய பண்ணை திட்டத்தை செயல்படுத்தியபோது, விளைபொருட்களை லாபகரமான முறையில் சந்தைப்படுத்துவது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. விவசாய குழுக்கள் அமைக்கப்பட்டு சந்தைப்படுத்துவதில் அதிக லாபம் ஈட்டினர். சந்தை நிலவரம் அறிந்து அதற்கேற்ப பயிர்களை தெரிவு செய்வதன் மூலம், சந்தை நிலவரத்தை விவசாயிகள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியும். வேளாண் பல்கலையானது, சந்தைப் படுத்துவது குறித்து மாவட்ட அளவிலான திட்டம், வட்டார அளவிலான திட்டம் மற்றும் கிராம அளவிலான திட்டம் தயாரிக்க அரசு விற்பனைத் துறை அதிகாரிகளிடம் முறையிடப்பட்டுள்ளது. மேலும், ஆஸ்திரேலியாவில் 1,000 ஏக்கர் ஆப்பிள் பழத்தோட்டத்தை இருவர் மட்டும், உற்பத்தி முதல் விற்பனை வரை வியாபார நோக்குடனும், நவீன தொழில்நுட்ப நோக்குடன் பராமரிக்கின்றனர். பறித்த ஆப்பிள்களை கழுவுவது, உலர வைப்பது, எண்ணெய் பூசுவது, தரம் பிரிப்பது, சிப்பமிடுவது மற்றும் குளிர்சாதன அறையில் சேமிப்பது உள்ளிட்ட பணிகளை விவசாயிகளே செய்கின்றனர். தொடர்ந்து, சந்தைப்படுத்த இணையதளம் மூலமாக சர்வதேச அளவில் கொள்முதல் நிறுவனங்களிடம் விற்பனை செய்கின்றனர். இதே முறையில் நமது விவசாயிகளும் பண்ணை வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு, முருகேசபூபதி பேசினார். இக்கூட்டத்தில், வேளாண் பல்கலை பயிற்சித் துறை தலைவர் விஜயராகவன், சேலம் மாவட்ட கூட்டுறவுத் துறை இணை இயக்குனர் ரவிச்சந்திரன், பல்கலை விரிவாக்கக் கல்வி இயக்குனர் கலைச்செல்வன், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு மைய இயக்குனர் அஜ்ஜன், கோவை விற்பனைத் துறை இணை இயக்குனர் சுப்ரமணியன் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

**அவரை விலை சரிவு; விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,21:45 IST

திருப்பூர் : தென்னம்பாளையம் மார்க்கெட் டில் அவரைக்காய் விலை நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருகிறது; விலை சரிவால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.திருப்பூரை சுற்றிலுள்ள கவுண்டம் பாளையம், தெற்குபாளையம், லட் சுமி நகர், செம்மிபாளையம், சேடர்

பாளையம், காரணம்பேட்டை, பள் ளிபாளையம், கள்ளிமேடு, கணபதிபாளையம் உள்ளிட்ட பகுதியில் இருந்து தென்னம்பாளையம் மார்க் கெட்டுக்கு அவரை வரத்து அதிகமாக உள்ளது. கடந்த வாரம் ஒரு சிப்பம் 150 முதல் 170 ரூபாய் வரை விற்பனையானது. நேற்று சிப்பம் 80 முதல் 90 ரூபாயாக குறைந்ததால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.விவசாயிகள் கூறியதாவது: ஓராண்டு பயிரான அவரை, விதை நடுவது முதல் ஆறு மாதம் வரை வளர்ச்சி மட்டும் இருக்கும். 15 நாட்களுக்கு ஒருமுறை களைபறிப்பு மற் றும் உரம் இடுதல், நான்கு நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் விடுதல், வாரம் ஒருமுறை மருந்து தெளித்தல் என காய் பறிப்புக்கு வரும் வரை ஏக்கருக்கு லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும். காய் பறிப்பு துவங்கி, தொடர்ந்து ஆறு மாதம் மகசூல் பெற முடியும். வாரத்துக்கு ஒன்றரை டன் வரை காய் பறிப்பு இருக்கும்.களை பறிப்பு முதல் காய் பறிப்பு வரையுள்ள வேலைகளுக்கு தற் போது ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் சாப்பாட்டுடன் 70 முதல் 80 ரூபாய் வரை கூலியாக கொடுக் கப்பட்டது. இன்று சாப்பாட்டுடன் 200 ரூபாய் கொடுக்க முன்வந்தாலும் ஆட்கள் கிடைப்பதில்லை. கூலி, உரம், மருந்து என அனைத்து செலவுகளும் உயர்ந்து விட்டன, என்றனர்.

**நெல் விதை பண்ணையில் அதிகாரிகள் ஆய்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,21:34 IST

உடுமலை : உடுமலை, மடத்துக்குளம் பகுதி நெல் விதைப்பண்ணைகளை விதை சான்று இணைஇயக்குநர் கந்தசாமி ஆய்வு செய்தார். உடுமலை மற்றும் மடத்துக்குளம் பகுதியில் நடப்பு பருவத்தில் 1,500 ஏக்கரில், அமராவதி பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசனத்தில் அரசு மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்களால் நெல் விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஏடிடி(ஆர்)45, ஏடிடி37, ஏடிடி39 மற்றும் ஏஎஸ்டி16 ரக நெல் விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டு, விதைசான்று அலுவலர்களால் வயலாய்வு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், நெல் விதைப்பண்ணைகளை விதைசான்று இணை இயக்குநர் கந்தசாமி, விதை சான்று உதவி இயக்குநர் பழனிக்குமார் ஆகியோர் வேடப்பட்டி, ஜோத்தம்பட்டி விதைப்பண்ணைகளை ஆய்வு செய்தனர். ஆய்வின் போது, பூப்பருவத்தில் உள்ள விதை வயல்களில் காணப்படும் கலவன் பயிர்களை முழுவதுமாக நீக்கி இனத்தூய்மையினை பராமரிக்க வேண்டும். பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டினை குறித்த நேரத்தில் செய்து வயல்களில் தரத்தை பாதுகாக்க வேண்டும்', என அறிவுறுத்தப்பட்டது. தொடர்ந்து உடுமலை நகரில் இயங்கி வரும் தனியார் விதை சுத்திகரிப்பு நிலையங்களில் ஆய்வு நடந்தது. வயல்மட்ட விதைகளை ரகவாரியாக கிடங்குகளில் சேமித்து வைத்து, சுத்தகரிப்பு செய்து விதை மாதிரிகளை பகுப்பாய்வு செய்ய வேண்டும். பகுப்பாய்வில் தேர்ச்சி பெற்ற விதை குவியல்களுக்கு உரிய காலத்திற்குள் சான்றட்டை பொறுத்த வேண்டும். விதை குவியல்களை பூச்சி

தாக்குதலில் இருந்து பாதுகாக்க உரிய பயிர் பாதுகாப்பு நடவடிக்கைளை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மேற்கொள்ளவும், விதைகள் உற்பத்தியின் போது பிற ரக விதைகள் கலந்து விடாமல் இனத்தூய்மையை பராமரிக்க வேண்டும் என விதை உற்பத்தியாளர்களுக்கு விதை சான்று இணை இயக்குநர் கந்தசாமி அறிவுரை வழங்கினார். ஆய்வின் போது விதை சான்று அலுவலர்கள் உடனிருந்தனர்.

**காளான் தொழிற்சாலையை அரசுடமையாக்க யோசனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2011,22:30 IST

குன்னூர் : "எல்லநள்ளி சுற்றுவட்டார மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்த, எல்லநள்ளி காளான் தொழிற்சாலையை, அரசே ஏற்று நடத்த வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது. ஊட்டி - குன்னூர் சாலையோரத்தில் உள்ள எல்லநள்ளி பஜார், கிராமத்தில் 1,200க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர்; வரும் சட்டசபை தேர்தலில், 30 குடும்பங்களை உள்ளடக்கிய சத்யமூர்த்தி நகர், 40 குடும்பங்களை உள்ளடக்கிய காமராஜர் நகர் பகுதிகள், புதிதாக எல்லநள்ளி வார்டில் இணைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், எல்லநள்ளியில் மூடப்பட்டுள்ள காளான் தொழிற்சாலையை, அரசே ஏற்றி நடத்தினால், மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என, வலியுறுத்தப்பட்டுள்ளது.எல்லநள்ளி பகுதி கவுன்சிலர் மூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கை:எல்லநள்ளி பகுதியில், கடந்த நான்கரை ஆண்டுகளில், எம்.எல்.ஏ., தொகுதி நிதியின் கீழ், 5 லட்சத்தில், ஆலன் நகர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நடைபாதை, தலா 4 லட்சத்தில், பஜார் மற்றும் ஹட்டியில், இரு சமுதாயக் கூடங்கள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன. 5 லட்சத்தில், தண்ணீர் குழாய் பராமரிப்பு, 3 லட்சத்தில், மாரியம்மன் கோவில் முன்புறம் தடுப்புச் சுவர், ஒரு லட்சத்தில், மசூதி அருகே அறை, 1.25 லட்சத்தில், சற்குரு மடத்தின் மேற்புறம் நடைபாதை, 50 ஆயிரத்தில், அட்டுக்கொலையில் பயணியர் நிழற்குடை, 3 லட்சத்தில், ஜீப் ஸ்டாண்டு, 2 லட்சத்தில் பள்ளி அருகே நடைபாதை அமைக்கப்பட்டுள்ளன.மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 16 லட்சத்தில் அல்லஞ்சி மக்களுக்கு சாலை, 5 லட்சத்தில், ஜோதி நகர், சத்யமூர்த்தி நகர் கிணற்றை சுற்றி தடுப்புச் சுவர் உட்பட, ஒரு கோடியே 8 லட்சம் மதிப்பில், பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எல்லநள்ளி பகுதியில் உள்ள ஊசி மற்றும் காளான் தொழிற்சாலைகள், சுற்றுவட்டார மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. தற்போது மூடப்பட்டுள்ள காளான் தொழிற்சாலையை அரசே ஏற்று நடத்தினால், சுற்றுவட்டார மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இவ்வாறு, மூர்த்தி கூறியுள்ளார்.